# இலங்கை போக்குவரத்துச் சபை

## நடமாடும் பரிசோதகர் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்

## சிறந்த, தரமான போக்குவரத்து சேவையின் பெருமைக்குரிய பங்குதாரராவதற்கு எம்முடன் இணையுங்கள்

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகத்தில் நடமாடும் பரிசோதகர் பிரிவில் வெற்றிடமாக உள்ள நடமாடும் பரிசோதகர் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இது பஸ் வண்டிகளின் வீதிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர் குழுக்களின் கடமைகளைப் பரீட்சிக்கும் பதவியாகும். (முப்படையிலிருந்து சட்டபூர்வமாக சேவையிலிருந்து விலகியவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்)

நிலவும் பதவி வெற்றிடங்கள்

தலைமை அலுவலகத்தின் நடமாடும் பரிசோதகர் பிரிவில் 50 நடமாடும் பரிசோதகர் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்.

**01. நடமாடும் பரீட்சகர் பதவி (ஒப்பந்தம்)**

**கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள்**

I. க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மற்றும் கணிதம் போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

II. க.பொ.த (உ/த) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

III. மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஆறு (06) மாத காலத்திற்குக் குறையாத கணனி கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல்

IV. 18 - 45 வயதுக்கிடையில் இருத்தல் வேண்டும்.

V. சிறந்த தேகாரோக்கிய நிலையில் இருக்க வேண்டும் மற்றும் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

VI. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதுடன் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

VII. முப்படையில் சேவையாற்றியவர் விண்ணப்பிப்பதானால் முப்படையில் நிரந்தர சேவை அல்லது தன்னார்வ சேவையாற்றி கௌரவமான சட்டபூர்வமாக விலகியவராக இருக்க வேண்டும்.

**பொது நிபந்தனைகள் மற்றும் வழங்கப்படும் வசதிகள்**

- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களின் பங்களிப்பு 08% என்பதுடன் தொழில் வழங்குநரால் 12% பங்களிப்புச் செய்யப்படும். ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு தொழில் வழங்குநரால் 3% பங்களிப்புச் செய்யப்படும்.
- மாதாந்த அடிப்படை ஒப்பந்தக் கொடுப்பனவு

  ஆரம்ப ஒப்பந்தக் கொடுப்பனவு 46,220.00 ரூபா மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 17,800.00 உட்பட மேலதிக நேரக் கொடுப்பனவு, பயணச் செலவுகள் மற்றும் நடமாடும் பரீட்சகர்களுக்கு இபோச வினால் செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகள் செலுத்தப்படும். ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின் முறைமாற்று கடமை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.
- ஆட்சேர்ப்பதற்கு நேர்முகத் தேர்வின் பின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் பயிற்சி கற்கை நெறியின் பெறுபேறுகளின் பிரகாரம் குழு வரிசைக்கிரமத்தில் மேற்கொள்ளப்படும்.
- ஆட்சேர்ப்பின் பின் சேவையாற்றும் இடத்திற்கு செல்வதற்கும் மற்றும் திரும்புவதற்கும் 30 கி. மீற்றருக்குள் பயண அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதித் தீர்மானத்தை இபோச பணிப்பாளர் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

மேற்கூறிய பதவிகளுக்காக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் பின்வரும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தை ‘‘பிரதான நிறைவேற்று அதிகாரி, இலங்கை போக்குவரத்துச் சபை, இல. 200, கிருள வீதி, நாராஹென்பிட்டி, கொழும்பு 05’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026-09-30ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன், நேர்முகத் தேர்வின் போது பாடசாலை விடுகைப் பத்திரம் (மாணவர் பதிவுப் புத்தகம் மற்றும் தாம் சேவையாற்றிய முப்படையில் நிரந்தர சேவையிலிருந்து சட்டபூர்வமாக விலகிய சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்) கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். மாதிரிப் படிவத்திற்கு அமைவாக அல்லாத மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

**பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை போக்குவரத்துச் சபை,**
**இல. 200, கிருள வீதி,**
**நாராஹென்பிட்டி, கொழும்பு 05.**

Gazette.lk
SINCE 2014
AMBITIONS REALIZED

**விண்ணப்பிக்கும் பதவி.................................................................................**

1. (அ) விண்ணப்பதாரரின் முழுப் பெயர் : ..................................................................
   (ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் : ..................................................................
2. முகவரி : ..................................................................
3. i. பிறந்த திகதி : ..................................................................
   ii. 2026-09-30ஆம் திகதியில் வயது: வருடம்.............. மாதம் .....................நாட்கள் ............
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..................................................................
5. தொலைபேசி இலக்கம்: ................................. WhatsApp இலக்கம்: .......................
   மின்னஞ்சல் முகவரி : ..................................................................
6. மதம் : ..................................................................
7. இனம் : ..................................................................
8. i. நீங்கள் இலங்கைப் பிரஜையா என்பது பற்றி : ..................................................
   ii. அவ்வாறானால் பதிவினாலா அல்லது பரம்பரையினாலா : ...............................
9. கல்வித் தகைமைகள்:
   i. க.பொ.த. (சா/தரம்)
   வருடம் : ..............................................................
   சுட்டெண் : ..............................................................

| | பாடங்கள் | சித்தி |
|---|---|---|
| | | |

   ii. க.பொ.த. (உ/தரம்)
   வருடம் : ..............................................................
   சுட்டெண் : ..............................................................

| | பாடங்கள் | சித்தி |
|---|---|---|
| | | |

10. சேவையாற்றிய நிறுவனம் (இராணுவம்)......................... (தரைப்படை/ கடற்படை/ வான்படை)
    i. சேவையில் சேர்ந்த திகதி : ..................................................................
    ii. விலகிய திகதி : ..................................................................
    iii. விலகிய காரணம் : ..................................................................
    iv. நிரந்தரம் / தன்னார்வம் : ..................................................................
11. சேவை அனுபவம் இருந்தால் அது தொடர்பான விபரங்கள் : .................................
    i. சேவையாற்றிய நிறுவனம் : ..................................................................
    ii. காலம் : ..................................................................
    iii. சேவையிலிருந்து விலகியிருந்தால் அது தொடர்பான விபரங்கள்:
12. ஏனைய தகைமைகள்
13. i. இதற்கு முன் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ............................
    ii. அவ்வாறானால் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும் :

    ......................................................................................................................

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன் என்பதுடன் பொய்யான தகவல்கள் வழங்கியிருந்தால் அது தொடர்பில் சபை மேற்கொள்ளும் எந்தவொரு தீர்மானத்திற்கும் இணங்குவதாக சான்றளிக்கின்றேன்.

திகதி: ........................................          ........................................

விண்ணப்பதாரரின்
கையொப்பம்